## *20.04.2017:-* பாத்திமா திருத்தலத்தில் மே 13ம் தேதி புனிதர்பட்ட விழா



**பாத்திமா நகரில் அன்னை மரியா தோன்றியதன் முதல் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்க, அங்கு திருத்தூதுப் பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மே மாதம் 13ம் தேதி, இடையர்களான பிரான்சிஸ்கோ மார்த்தோ, ஜெசிந்தா மார்த்தோ என்ற இருவரையும், அத்திருத்தலத்தில் புனிதர்களாக உயர்த்துவார்.**

*ஏப்ரல் 20, வியாழன் காலை வத்திக்கானில் நடைபெற்ற கர்தினால்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனையின் இறுதியில், திருத்தந்தை இத்தகவலை வெளியிட்டார்.*

*இடையர்களான பிரான்சிஸ்கோ, ஜெசிந்தா இருவரின் பரிந்துரையால் நிகழ்ந்த ஒரு புதுமையை, மார்ச் மாதம் 23ம் தேதி, திருத்தந்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, இந்த நூற்றாண்டு விழா, புனிதர் பட்ட விழாவாகவும் உருவெடுத்துள்ளது.*

*10 வயது நிறைந்த பிரான்சிஸ்கோவும், 9 வயது நிறைந்த ஜசிந்தாவும் புனிதர்களாக உயர்த்தப்படும்போது, கிறிஸ்துவுக்காக தங்கள் உயிரைத் துறந்த குழந்தை மறைசாட்சிகள் அல்லாமல், திருஅவையில், மிகக்*

குறைந்த வயதில் புனிதர் பட்டம் பெற்றவர்கள் என்ற பெருமையை இவர்கள் இருவரும் பெறுவர்.

இவ்விருவரையும், *2000*ம் ஆண்டு, மே மாதம் *13*ம் தேதி, புனித திருத்தந்தை *2*ம் ஜான்பால், அருளாளர்களாக உயர்த்தினார். மேலும், மறைசாட்சிகளாக உயிர் துறந்த அருளாளர்களான, அருள்பணியாளர்கள் *Andrea de Soveral, Ambrose Francesco Ferro,* பொதுநிலையினரான *Matteo Moreira* மற்றும் *27* தோழர்களும், இறை ஆயனின் புதல்வியர் சபையை நிறுவிய அருள்பணியாளர் *Faustino Míguez,* கப்பூச்சியன் துறவு சபையைச் சேர்ந்த அருள்பணியாளர் *Angelo da Acri* என்ற இரு அருளாளர்களும், அக்டோபர் *15,* ஞாயிறன்று, புனிதர்களாக உயர்த்தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி